
# தலைநகரில் மேலும் 9 கடைகளுக்கு சீல்



கோலாலம்பூர், நவ.4-

தலைநகர், ஜாலான் ஜெர்னாய்1, ஜெர்னாய் 3, மேடான் இடாமானில் அந்நிய நாட்டவர்கள் நடத்தி வந்த அங்காடி கடைகளுக்கு கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் அமலாக்கப் பிரிவினர் சீல் வைத்தனர்.

லைசென்ஸ் இன்றி வியாபாரம் செய்து வந்த அவர்களின் கடைகளுக்கு அமலாக்கப் பிரிவினர் சீல் வைத்ததாக நேற்று வெளியிட்ட ஓர் அறிக்கையில் அது கூறியது.

2016ஆம் ஆண்டு அங்காடி வியாபாரிகளின் சிறு சட் டப்பிரிவின் கீழ் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் அந்த அறிக்கை கூறியது.